**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.69/2020**
Prosecution: **PW14**

Deposition of the witness of **LW16**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.கீதா | District | சென்னை |
| Husband Name | திரு.ரவிச்சந்திரன் | Occupation | தலைமையிடத்து துணை ஆணையாளர் சென்னை மாநகர காவல் |
| Village /Area | சென்னை | Age | 39 |
| Taluk | சென்னை | ID card No. | Verified |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 14.11.2025.

சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகம் காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சி காணொலி காட்சி மூலம் ஆஜராக, சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் தலைமையிட துணை ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இராணிப்பேட்டை துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்த போது இராணிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.576/2019, பிரிவு 174(3) கு,வி.மு.ச–ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கை 18.09.2019–ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடமான பைரா காலனி நரசிங்கபுரத்திலுள்ள வழக்கில் இறந்த நபரான தனலட்சுமி என்பவர் வீட்டை பார்வையிட்டு சாட்சிகள் முனுசாமி, இளவரசன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை தயார் செய்தேன். என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும் நான் தயார் செய்த பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும் நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12** ஆகும். என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும்

சம்பவ இடத்தில் வைத்து நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரோஸ் கலர் பூ போட்ட சேலையின் துண்டுகள்– 2 கைப்பற்றினேன். சம்பவ இட சாட்சிகளான கண்ணன், மார்கபந்து, முருகன், குமரேசன், சக்திவேல் ஆகியோரையும், மகசர் சாட்சிகளான இளவரசன் மற்றும் முனுசாமி ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும் ரோஸ் கலர் பூ போட்ட துண்டுகளை தான் நான் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். 21.09.2019 அன்று இராணிப்பேட்டை சார் ஆட்சியர் அனுப்பிய பிரேத விசாரணை அறிக்கையை பெற்று இவ்வழக்கை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் இராணிப்பேட்டை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும் நான் இராணிப்பேட்டை காவல் ஆய்வாளருக்கு வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து தொடர் புலன் விசாரணை செய்ய அறிவுறுத்தி அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.13** ஆகும். கைப்பற்றுதல் மகசரில் நான் கைப்பற்றிய ரோஸ் கலர் பூ போட்ட சேலையின் துண்டுகள் இரண்டை படிவம் 91–ன் மூலம் இராணிப்பேட்டை நீதித்துறை நடுவருக்கு 18.09.2019–ம் தேதி அனுப்பி வைத்தேன். என்னிடம் காணொலி மூலமாக காண்பிக்கப்படும் அந்த படிவம் 91 **அ.சா.ஆ.14** ஆகும். வழக்கை மேற்கொண்டு இராணிப்பேட்டை காவல் ஆய்வாளர் புலன் விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

எனக்கு சம்பவம் குறித்த தகவல் 18.09.2019–ம் தேதி காலை 4.00 அல்லது 4.15 மணிக்கு காவல் ஆய்வாளர் கைபேசியின் மூலமாக எனக்கு தெரிவித்தார். சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் நான் பதிவு செய்யவில்லை. இராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.தாசன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை நகல் எனக்கு கிடைக்கப்பெற்ற பின்னர் தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு நான் காலை சுமார் 11.00 மணிக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் இருந்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அது பற்றி உறுதியாக கூற இயலாது. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு 18.09.2019–ம் தேதி காலை 9.30 மணிக்கு கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே இறந்த நபரின் உடலை மருத்துவமனைக்கு உடற்கூராய்விற்கு அனுப்பி வைத்துவிட்டனர். நான் மருத்துவமனையில் வைத்து தான் அந்த பிரேதத்தை பார்த்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் இறந்த நபரின் கூரை வீட்டின் நீளம், அகலம், உயரம் ஆகியவற்றின் அளவுகளை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த கூரை வீட்டின் முன்பக்க கதவின்

நீளம், அகலம், உயரம் ஆகியவற்றின் அளவை மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த கூரை வீட்டின் முன்பக்க கதவு மரக்கதவா, உலோகத்தினால் ஆன கதவா என அதன் வகை பற்றி மாதிரி வடைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காணொலி மூலம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.12 மாதிரி வரைபடத்தில் சம்பவ இட வீடாக வரையப்பட்டுள்ள படத்தில் ஒரு இடத்தில் ஒயிட்னர் வைத்து மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒயிட்னர் நான் தயார் செய்த போதே திருத்தத்திற்காக வைக்கப்பட்டிருக்கலாம். அந்த ஒயிட்னர் வைக்கப்பட்டதாக நான் மேற்குறிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கூரை வீட்டிற்கு ஒரே நுழைவாயில் தான் உள்ளது. அந்த வீட்டின் கூரை எந்த இடத்திலும் பிரிக்கப்படாமல் முழுமையாக இருந்தது என்றால் சரிதான். அந்த கூரை வீட்டின் வரைபடத்தில் உடைந்த பகுதி என நான் குறிப்பிட்டுள்ளது சுவரின் உடைந்த பகுதியா அல்லது கதவின் உடைந்த பகுதியா அல்லது வாசக்கால் பகுதியா அல்லது கதவின் கைபிடியா என நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.12 மாதிரி வரைபடத்தை நான் என் கைப்பட வரைந்தேன். அ.சா.ஆ.2 பார்வை மகசர் என்னால் சொல்லப்பட்டு, என்னுடைய எழுத்தரால் எழுதப்பட்டது. அந்த எழுத்தரின் பெயர் தற்போது ஞாபகமில்லை. அ.சா.ஆ.2 பார்வை மகசரில் கண்ட விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு என்னுடைய எழுத்தரால் எழுதப்பட்டதாக மேற்குறிப்பு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 பார்வை மகசரின் தலைப்பில் பார்வை மகசர் என வேறு ஒரு நபரால் எழுதப்பட்டு, அதன் அடியில் போடப்பட்டுள்ள வளைவான கோடு வேறு மையினால் வரையப்பட்டுள்ளதால் பார்வை மகசர் வெவ்வேறு நபர்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் நான் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.14 படிவம் 91 என்னுடைய எழுத்தரால் எழுதப்பட்டது. அ.சா.ஆ.14 படிவம் 91–ல் கண்டுள்ள வழக்கு சொத்தை 18.09.2019–ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91–ல் 22.09.2019–ம் தேதி நீதித்துறை நடுவர் வழக்கு சொத்து ஒப்படைக்கப்படவில்லை என்றும், அதன் காரணமாக திருப்பப்படுவதாகவும் எழுதி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த படிவம் 91–ல் கண்டுள்ள வழக்கு சொத்து 18.09.2019–ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றாலும், 18.09.2019–ம் தேதி அந்த படிவம் 91 தயார் செய்யப்படவில்லை என்றாலும், பிற்பாடு முன் தேதியிட்டு தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.12 மாதிரி வரைபடம் நான் தயார் செய்யவில்லை என்றாலும், தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தில் நான் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் பதிவு செய்த கு.வி.மு.ச பிரிவு 161(3)–ன் கீழான வாக்குமூலங்களை அந்த சாட்சிகளை என்னுடைய அலுவலகத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணை அதிகாரி என்ற வகையில் என்னை

இராணிப்பேட்டை சார் ஆட்சியர் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தை எங்கள் காவல் துறை புகைப்படகாரரை வைத்து புகைப்படங்கள் எடுத்தேன். தனலட்சுமி என்பவரின் இறப்பிற்கு வரதட்சணை கொடுமை காரணமல்ல என இராணிப்பேட்டை சார் ஆட்சியர் எனக்கு அறிக்கை கொடுத்ததால் நான் அந்த வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தை பொறுத்து நான் முதற்கட்ட விசாரணை எதுவும் செய்யவில்லை என்றாலும், என்னுடைய கீழ் அதிகாரி தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதற்கட்ட விசாரணையின் போது பிரிவு 161(3) கு.வி.மு.ச–ன் கீழ் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்திருந்தால் என்னுடைய மேற்பார்வையின் கீழ் எனக்கு கீழ் பணிபுரியும் அலுவலரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாக குறிப்பு எழுதியிருந்திருப்பேன் என்றாலும் அவ்வாறு குறிப்பு இல்லாததால் அந்த வாக்குமூலங்கள் என்னுடைய மேற்பார்வையின் கீழ் பதிவு செய்யப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை

Taken down through video conference before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.